மலடி மகன்

"மலடி வயிற்று மகன் போல" என்கிறார்கள். இது நடக்கக் கூடாதது என்று நினைக்க நாங்கள் தயாராக இல்லை. எங்கள் கண்ணுக்கெதிரிலேயே நடந்ததென்றால் பிறகு பேச்சுண்டா? முதல்நாள் இரவு வரையில் அவர்களுக்குக் குழந்தை இல்லை. மறுநாள் காலை பத்துமணிக்கு அவர்களிடம் ஒரு பச்சைப்பசுங்குழந்தை இருந்ததென்றால்? அந்தக் குழந்தையும் சாதாரணமாக வரவில்லை. ஊரிலே பெரிய பரபரப்பையும் வம்பையும் விவகாரத்தையும் கிளறி விட்டுக்கொண்டே வந்தது.

அந்தக் குழந்தைக்குக் கிருஷ்ணன் என்று பெயர் வைத்தார்கள். பொருத்தமான பெயர்! ஏனென்றால் குழந்தை நீருண்ட மேகம் போல்தான் இருந்தது. ஆனால் அந்தப் பெயர் வைத்ததற்கு வர்ணம் காரணமல்ல என்பது ஊரார் அபிப்பிராயம்.

ஆதியில் ஆற்றங்கரை மடம் அங்குமிங்கும் இடிந்து, ஓடுகள் உடைந்து நாதியற்றுக் கிடந்தது. அப்பொழுது, இனிமேல் தமக்குக் குழந்தைகள் உண்டாகும் என்ற நம்பிக்கையை முகுந்தராவ் இழக்கும் சமயம்; தர்ம காரியங்களில் தலையிடத் தொடங்கிய சமயம். அவர் வெறும் எழுத்துக் கூலிக்காரரே. அவர் வசித்து வந்த தெருவிலே மிகவும் பணக்காரர்களெல்லாம் உண்டு. இருந்தாலும் ஆற்றங்கரை மடத்தின் நிலையைப்பற்றி அவருக்குத்தான் அக்கறை பிறந்தது. ஆற்றங்கரைக்குக் குளிக்கப் போகும்பொழுது

காற்றுக் கிளம்பி, ஓடு புரண்டு தெரிந்த ஓட்டை வழியாக மடத்துக்குள் புகுந்தடிப்பதை பார்க்கும் பொழுதெல்லாம் அவருக்குத் தம் ஜன்மத்தைப் போலவே மடமும் பாழாகிப் போய்விடப் போகிறதே என்ற பயம்.

ஆகையால் தர்ம கைங்கர்யம் செய்ய ஆரம்பித்தவுடன் மடத்தைப் பழுதுபார்த்து ஓடு போட்டார். அதோடு அவர் நிற்கவில்லை. சுண்ணும்பு வாங்கி மடத்தையெல்லாம் வெள்ளையடிக்கச் சொன்னார். வெள்ளை அடித்தபிறகு வேறு ஓர் ஆசை பிறந்தது. வெறிச்சென்று சுவரை வைக்கக் கூடாதென்று தஞ்சாவூர் வர்ணக்காரன் ஒருவனைப் பிடித்தார். பார்வதி பரமேசுவரர், ராம பட்டாபிஷேகம், பிரும்மா சரஸ்வதி, ருக்மணி சத்யபாமா சகிதமான கிருஷ்ணன், சுகப்பிரும்மம், கருடன், ஹனுமான் ஆகிய சித்திரங்களைச் சுவரில் எழுதுவதென்று தீர்மானம் செய்தார். இந்தச் சித்திரங்களெல்லாம் எழுதும்போது முகுந்தராவுக்கு ஆற்றங்கரை மடத்திலேயே வாசம் என்று சொல்லி விடலாம். வெறும் சுவரில் சித்திரம் பிறப்பதைப் பார்ப்பதனாலோ என்னவோ ஓர் அந்தரங்க ஆனந்தம் அவருக்கு உண்டாகிக் கொண்டிருந்தது. இந்தச் சித்திரங்களைப் பார்ப்பதற்கு என்ன கூட்டம்! பெண்களும் பையன்களும் எத்தனை வக்கணை சொன்னார்கள்.

சித்திரக்காரன் ருக்மணி சத்யபாமா சகிதமான கிருஷ்ணனை எழுதிக்கொண்டிருந்த கட்டம். நீலவர்ணத்திலே கிருஷ்ணனைப் போட்டு முடித்துவிட்டான். சம்பிரதாயமான முறையிலே கிருஷ்ணனுக்கு மஞ்சள் பீதாம்பரம் உடுத்தப்பட்டிருந்தது. முழங்கால்வரையில் தண்டுமாலையும் அங்கவஸ்திரமும் தொங்கிற்று. மயிலிறகு தரித்த தலை அழகாய் வலதுபுறம் சாய்ந்திருந்தது. இரு கைகளும் இடுப்பில் ஊன்றியிருந்தன. உண்மையிலேயே அவ்வளவு சித்திரங்களைக் காட்டிலும் கிருஷ்ணன் படத்திலேதான் ஜீவகளை வீசிற்று. வழக்கம்போல் வேடிக்கை பார்க்க யார்

யாரோ வந்தார்கள். படத்தின் திறமையைப்பற்றி எல்லோருமே வியந்துவிட்டுப் போனார்கள். சிறுவர்கள் கோஷ்டி ஒன்று வந்தபோதுதான் ஓர் அதியற்புதமான உண்மையைக் கண்டுபிடித்தார்கள். முகுந்தராவை அப்படியே உரித்து வைத்திருந்ததுபோல் அமைந்திருந்தது அந்தப் படம். முகுந்தராவ் மட்டும் இடுப்பில் கைவைத்துக் கொண்டு தலையைச் சாய்த்துக்கொள்ள வேண்டியதுதான் குறை.

"ஏய்! கிருஷ்ணன் இல்லேடா இது. முகுந்தராவை பார்த்து காப்பி அடிச்சிருக்காண்டா" என்றான் துடியான ஒரு பையன். இந்த உண்மை வெளிப்பட்ட பிறகு முகுந்தராவுக்குப் பெயர் கிருஷ்ணராவ் ஆகிவிட்டது.

இந்த சித்திரங்களுள் தலைசிறந்தது கிருஷ்ண சித்திரம் தானே! அதனால்தான் பையனுக்கும் கிருஷ்ணன் என்று பெயரிட்டிருக்கிறான் என்றனர் சிலர். சித்திரங்களெல்லாம் எழுதி ஒரு வருஷத்துக்கு மேலாயிற்று. "இந்தக் குழந்தை இப்பொழுதுதான் வந்திருக்கிறது. காரணம் என்னவோ தெரியவில்லை" என்றனர் வேறு சிலர். உண்மையில் இதர விஷயங்கள் சில இருக்கத்தான் செய்தன.

சரியாக ஒருமாதத்திற்கு முந்தி முகுந்தராவுக்கு திடீரென நோய் கண்டது. ஊரில் உள்ள சித்த வைத்தியர் பார்த்து, "முப்பூவிலே முப்பதுநாள் மருந்து சாப்பிட்டால் வியாதி நீங்கிவிடும்" என்றார். சித்தவைத்தியம் என்றால் வாய்க்குப் பிடிக்கும்படியாக மருந்து கொடுக்கமுடியும் என்பதில் சற்று அவநம்பிக்கை ராவுக்கு உண்டு. யுனானி வைத்தியம் மகாராஜாக்களுக்கு எடுத்தது அல்லவா? ஆகவே தர்ம ஆஸ்பத்திரிக்குப் போனார். டாக்டர் என்ன என்னவோ பரிசோதனை செய்துவிட்டு ஜில்லா ஆஸ்பத்திரிக்குத்தான் வைத்தியத்துக்குப் போகவேண்டும் என்று சிபார்சுக் கடிதம் எழுதிக்கொடுத்தார்.

முகுந்தராவ் ஜில்லா ஆஸ்பத்திரிக்கு மனைவி சகிதமாகப் போனார். குடல் அநுபந்த நோய்க்காக ஆபரேஷன் நடந்தது.

ஒருநாள் ஆஸ்பத்திரியிலே யாரோ ஒருவன் விற்பனைக்காகப் படங்கள் எடுத்துக் கொண்டு வந்திருந்தான். தஞ்சாவூர்ப் படங்கள்; அதாவது, கண்ணாடியிலே எழுதியிருக்கும். ஆஸ்பத்திரிப் படுக்கையில் ரொட்டியும் பாலும் உண்டுவிட்டுச் சப்பென்று வாழ்க்கையைக் கழிக்கும் நோயாளிகளுக்கு இந்தப் படங்கள் பெரிய விருந்தாக வந்து சேர்ந்தன. எதை எதை யெல்லாமோ போட்டுப் புரட்டினார்கள். அவன் சொன்ன விலையைக் கேட்டுவிட்டு வாயைப் பிளந்தார்கள். அதிலே ஒரு கிருஷ்ணன் படம் இருந்தது. ஆகாயத்திலே பஞ்சு பறந்தது. கீழே யமுனை நதி, அதில், மீன்கள் முதலான எத்தனையோ ஜல ஜந்துக்கள் நீரில் எதிர்த்துப் போவது போல் எழுதியிருந்தது. ஒரே ஒரு புன்னை மரம். கிருஷ்ணன் ராதையைக் காணோமே என்று ஏங்குவது போல் தோன்றிற்று. படமென்னவோ மிகவும் உயர்ந்ததென்பதற்கில்லை. ஆனால் முகுந்தராவுக்கு அதை வாங்க வேண்டுமென்று தோன்றிற்று. அவர் மனைவிக்கு அதை வாங்கிவிட வேண்டுமென்று அவரைவிட அதிக ஆவல். அந்தப் படக்காரன் யானை விலை குதிரை விலை சொன்னால் யார் வாங்குவார்கள்? முகுந்தராவுக்கு அதை எப்படியேனும் வாங்கிவிட வேண்டுமென்ற பித்து. முதல் இல்லாவிட்டால் வியாபாரம் நடக்குமா? படக்காரன் அலுப்புப் பட்டுக் கொண்டு எழுந்து போய்விட்டான்.

அன்று முதல் முகுந்தராவுக்கு ஒரே ஏக்கம். அன்றிரவு திடீரென உடல் நிலையிலே ஒரு கோளாறு ஏற்பட்டது. அத்தனை நாளுமில்லாமல் ஜ்வரம் கண்டது. இந்த மாறுதலுக்குக் காரணம் டாக்டருக்குக்கூட விளங்கவில்லை. முகுந்தராவுக்கு ஜ்வரம் வந்த பிறகு படம் வாங்காமல்

விட்டது என்னவோ துர்ச்சகுனம் மாதிரி அவர் மனைவிக்குப் பட்டது. படத்தைப் பற்றிய ஞாபகமாகவே அவர் இருந் தார்.

ஒரு வாரம் கழிந்தது. ஒருநாள் பாதி ராத்திரி இருக்கும். திடீரென்று முகுந்தராவ் விழித்தெழுந்து தூக்கத்தில் புரண்டு கொண்டிருந்த மனைவியை எழுப்பினார். அந்த அம்மாள் பயந்து போய், வாரிச்சுருட்டிக் கொண்டு எழுந் திருந்தாள்.

"ஒன்றுமில்லெ, பயப்படாதே. ஓர் அதிசயமான சொப்பனம் கண்டேன். ஒரு பெரிய திமிங்கிலம் மாதிரி மேகம் ஒன்று மிதந்து வந்தது. அதிலே அன்றைக்குப் படம் வந்தது பாரு. அந்த மாதிரி ஒரு கிருஷ்ணன் தெரிஞ்சான். இன்னும் பதினைஞ்சு நாளிலே உங்காத்துக்கு கட்டாயமா வரப்போறேன் இன்னான்" என்று தாம் கண்ட கனவைச் சொன்னார்.

அவர் மனைவிக்கு மனத்திலே ஒரு பெரிய பூரிப்பு. "அதான் யோசிச்சுகிண்டே இருந்தேன்—என்னடா இது, குளிச்சு மூணு மாசமாச்சே இன்னூட்டு. சுவாமி காரிய மெல்லாம் நமக்கென்ன தெரியறது ?" என்றாள்.

ஒரு வாரத்துக்கெல்லாம் முகுந்தராவ் ஆஸ்பத்திரியி லிருந்து ஊருக்குத் திரும்பி வந்துவிட்டார். வீட்டுக்கு வந்த தினத்தன்று காலை பத்துமணியிருக்கும். அடுத்த வட்டத்துக் கர்ணம் ஒரு பெரிய பத்திரிகைத் தாளில் எதையோ கட்டி எடுத்துக்கொண்டு வந்தார்.

"என்ன இவ்வளவு பந்தோபஸ்தாகக் கயிறு கியிறு எல்லாம் போட்டுக் கட்டிக்கொண்டு வந்திருக்கிறாயே" என்றார் முகுந்தராவ்.

"தஞ்சாவூருக்குப் போயிருந்தேன். ஆம்படையாள் தஞ்சாவூர்ப் படம் வேணும் என்று ரொம்ப நாளாக நச்சுப் பண்ணிக் கொண்டிருந்தாள். கிருஷ்ணன் படம் ஒன்று வாங்கினேன்."

முகுந்தராவ் பரபரவென்று கடுதாசை அவிழ்த்துப் படத்தைப் பார்த்தார். அட! ஆஸ்பத்திரியிலே வாங்க வேண்டுமென்று நினைத்தாரே, அதே படம்! அவருக்கு வியப்பும், மகிழ்ச்சியும், பக்தியும் மாறிமாறித் தோன்றின. படத்தை எடுத்து ஒரு பலகையில் வைத்து தூபதீபம் கொடுத்து வணங்கினர்.

இதெல்லாம் கர்ணத்துக்கு மிகவும் விநோதமாக இருந்தது. அப்பொழுது கிருஷ்ணன் தன் வீட்டுக்கு வருவதாகக் கனவில் சொன்ன விவரத்தையெல்லாம் முகுந்தராவ் எடுத்துச் சொன்னர்.

''கிருஷ்ணனுடைய லீலையே லீலை. அதனால்தான் பாகவதத்தைக் கலியுக வேதம் என்று நான் நினைச்சுண்டிருக்கேன். படம் இங்கேயே இருக்கட்டும் திருச்சறைவரையிலும் போகவேண்டியிருக்கு. நாளைய காலம்பர வந்து படத்தை எடுத்துக்கிண்டு ஊருக்குப் போறேன்'' என்று சொல்லிவிட்டுக் கிளம்பினர் கர்ணம்.

அவர் போனபிறகு முகுந்தராவ் மனைவியைக் கூப்பிட்டார். ஒரு தடவை, இரண்டு தடவை மூன்று தடவை, பதிலில்லை. ''காது செவிடா என்ன?'' என்று கேட்டுக்கொண்டே சமயலறைக்குள் போனர். அங்கே யாரும் காணேம். கிணற்றங்கரைப் பக்கம் போனர். தாழ்வாரத்தில் நின்றிருந்த அவர் மனைவி எட்டவேலியண்டை போய் நின்றுகொண்டு, ''ரொம்ப நன்னப் பலிச்சிருக்கு, ஒங்ககனு! என்னவோ மனப்பால் குடிச்சேன்'' என்ருள்.

''ஏன் பிசகென்ன? கிருஷ்ணன் வீட்டுக்குத்தான் வந்திருக்கான். எப்படியேனும் இந்தப் படத்தைக் கேட்டு வாங்கிக்கணும்.''

''எதை வேணுமானலும் செய்யுங்கோ. அதிலே எனக்கொரு அக்கறையுமில்லெ''

கர்ணம் தாம் சொன்னபடி மறுநாள் காலையில் வரவில்லை.

ஐந்தாவது நாள் அதிகாலை. முகுந்தராவ் அரைத் தூக்கத்திலிருந்தார். வீட்டு வாசற்புறத்திலே ஒரு பச்சைக் குழந்தை அழுவதுபோலச் சத்தம் கேட்டது. முகுந்தராவ் வாசற்கதவைத் திறந்துகொண்டு வந்து பார்த்தார். 'விராட் விராட்' என்று கத்தும் ஆண் குழந்தை. அதைக் கையிலெடுக்கத் தெரியவில்லை. "எந்தப் பாவி இப்படி அநாதையாய்ப் போட்டுவிட்டுப் போய்விட்டாளோ?" என்று சொல்லிக்கொண்டே உள்ளே போய் மனைவியை அழைத்துவந்தார். அவள் வந்து குழந்தையை வியப்போடு எடுத்துக்கொண்டாள். "இந்தமட்டும் பொறந்த குழந்தையைப் போட்டுட்டுப் போனாளே, திருகிப் புதைச்சுடாமே!" என்றாள்.

"கிருஷ்ணன் வரேன்னு கனாலே சொன்னானே. வந்தூட்டான் பார்த்தியா! படங்கூடப் பெரிசில்லை; இந்தக் குழந்தையை அடுத்த வீட்டுத் திண்ணையிலே போட்டுட்டுப் போனா நாம் ஒண்ணும் கவனிச்சிருக்க மாட்டோமே இல்லியோ?" என்றார் ராவ்.

குழந்தை சமாசாரத்தை சட்டப்படி போலீஸுக்குப் போய் தெரிவித்தார் ராவ். போலீஸார் அதைப் பற்றி விசாரணை செய்தார்கள். ஒன்றும் துப்பு விளங்கவில்லை. முகுந்தராவ் தாமே அக்குழந்தையை வளர்த்து வருவதாக உறுதிமொழி எழுதிக் கொடுத்தார். அன்று காலை முழுதும் தெரு ஜனங்கள் அந்த வீட்டை மொய்த்தவண்ணம் இருந்தார்கள்.

சுமார் இரண்டு மணி இருக்கும்; கர்ணம் வந்தார். இதோ ஊருக்குப் போறேன், பேப்பர் கொடு படத்தைக் கட்டறேன்" என்றார்.

"படத்தைப் பூஜையிலே வச்சிருக்கேன். என்கிட்டேயே இருக்கட்டும்" என்றார் முகுந்தராவ்.

"இல்லே, எனக்கு வேணும்."

கர்ணம் கூடத்தில் போய்ப் பார்த்தார். 'கிருஷ்ணன் படத்துக்கு அபரிமிதமான அலங்காரம் செய்திருந்தது. ஊதுவத்தி வாசனே கமகமவென்று சூழ்ந்திருந்தது. படத்துக்கு எதிராக ஒரு குழந்தை தூங்கிக் கொண்டிருந்தது.

"இது யார் குழந்தை ?"

"எங்க குழந்தைதான்."

"இதுகூட மாஞ்செடி முளேக்கிற வித்தையா என்ன ?"

"என் கனுப் பலிச்சிருக்கு. நான் படம் வாங்கணும்னு நெனேச்சேன். நீ வாங்கிண்டு வந்தே. நீ சொன்னபடி அடுத்த நாள் காலம்பர வந்திருந்தாலும் நான் படத்தை ஒரு வேளே கொடுத்திருப்பேன். இனிமேல் எப்படிக் கொடுப்பேன் ? கிருஷ்ணன் படம் தாஞக வந்தது ! இந்தக் குழந்தையும் தாஞக வந்திருக்கு ! படத்துக்குப் பணம் அடுத்த வாரம் தந்துடறேன். படத்தை மாத்திரம் கேட்காதே. உன் புண்யமாக அது இருக்கட்டும்" என்று மிகவும் உருக்கமாகக் கூறிஞர் முகுந்தராவ்.

கர்ணத்திற்குப் பேச நா எழவில்லே. அவர் ஊருக்குப் போய்விட்டார்.

கிருஷ்ணன் வீட்டுக்கு வருகிறேன் என்று வாக்குறுதி கொடுத்திருந்தானல்லவா ? முதலில் படமாகவும் பிறகு குழந்தையாகவும் வந்து விட்டான். ஆகையால் குழந்தைக்கு கிருஷ்ணன் என்று பெயர் வைக்காமல் வேறு என்ன தான் வைக்க முடியும் ?

ஆனுல் ஒன்று. முகுந்தராவ் என்ன பெயர் வைத்தால் என்ன ? ஊரார் அச்குழந்தையை மலடி மகன் என்று தான் சொல்லுகிருர்கள்.